www.tamilarangam.net

# மீண்டும் ஒரு அஞ்சலி

## வந்த நாடுகளிலும் தொடரும் அரசியல் படுகொலைகள்!!!

ஈழமுரசு பத்திரிகை ஆசிரியர் க.கஜேந்திரன்
தமிழீழ விடுதலைப் புலிகளின் அனைத்துலக நிதிப் பொறுப்பாளர் க.பேரின்பநாதன்

இவர்கள் 26.10.1996 அன்று பிரான்ஸ் நாட்டில் வைத்து "இனம்தெரியாதோரால்" கொல்லப்பட்டுள்ளனர்.

வந்த நாடுகளிலும் தாமுண்டு, தம் வேலையுண்டு என்ற பெரும்பான்மை போலில்லாமல் அரசியலில் தம்மை ஈடுபடுத்தியதால் இவர்கள் வாழ்வு பெறுமதியானது. இதனால்தான் கொலைகாரர்களால் அது அழிக்கப்பட்டது.

தாம் தேர்ந்தெடுத்த அரசியலுக்காக தமது வாழ்வை அர்ப்பணித்து இவர்கள் செயற்பட்டமை மதிப்புக்குரியது.

### கஜன்

புலிகளின் வழமையான வெளியீடுகளிலிருந்து ஈழமுரசை ஓரளவுக்கேனும் வேறுபடுத்தியதில் கஜனின் பங்கு அளப்பரியது. புலிகளை விமர்சிப்பவர்களையும் புலிகள் பற்றி அல்லாது வேறு விடயங்களையேனும் ஈழமுரசில் எழுத வைத்ததில் கஜன் குறிப்பிடத் தக்கவர். புலம்பெயர்ந்த கலைஞர்களின் முதுகுசொறியல்களை எடுத்துக்காட்டி, ஆரோக்கியமான படைப்புகள் வரவேண்டிய தேவையை கஜன் உணர்த்தினார். ஏனைய வர்த்தகப் பத்திரிகைகள் போலல்லாமல் சினிமா, வரலாறு, சிறுகதை, கவிதை, சாளரம் போன்ற பகுதிகளில் தரம் பேணப்பட்டது. திறந்த கருத்துச் சுதந்திரம் அரசியலில்லாதிருந்தாலும் கலை, இலக்கியத்தில் இருந்தது.

## என்ன செய்யலாம்?

இவர்கள் விட்டுச்சென்ற பாதையில் வீறு கொள்வோம் என்று பொங்கிவிட்டு தூங்கப் போய்விடுவதோ அல்லது கொல்லப்பட்டது புலிகள் தானே என்று பொறுப்பற்றதனமாய் கண்டுகொள்ளாமல் விடுவதோ சரியானதா?

விடுதலைப் போராட்டத்துடன் தொடர்பான இவர்கள் கொல்லப்பட்டதற்கான காரணங்களை அறிய முற்படுவது விடுதலைப் போராட்டத்திற்கு அவசியமானது.

இல்லையேல் தமிழீழ விடுதலைக்கான அரசியற் செயற்பாடுகளை நாமே குழி தோண்டிப் புதைத்தவர்களாவோம்.

## கொலையாளிகள் யார்?

### 1. சிறீலங்கா அரசா?

தனது சமாதான வேடத்தால் வெளிநாடுகள் திருப்தியடைந்துள்ள இறுமாப்பில் ஈழத் தமிழர் இறைமையை அழிக்கும் அடிப்படையில் புலிகளை அழிக்கும் நடவடிக்கையில் ஒன்றாக உருவாக்கப்பட்ட ஒப்பிரேசன் பீனிக்ஸ் மூலம் சிறீலங்கா அரசு இவர்களைக் கொன்றதா? சந்திரிகாவுக்கும், பிரான்ஸ் அரசுக்கும் வளர்ந்துவரும் நெருங்கிய உறவின் மூலம் இது சாத்தியமானதா?
தனது காலை நக்கிக் கொண்டிருக்கும் தமிழ் துரோகக் குழுக்கள் மூலம் தனக்குத் தொடர்பில்லாததுபோல் சந்திரிகாவால் திட்டமிடப்பட்டதா? சந்திரிகாவின் தமிழர் அழிப்பு முன்னைய சிறீலங்கா அரசுகளைவிட மிகவும் ராஜதந்திரமானது. அரசியல் ரீதியாக தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதில் வெற்றியடைந்து வருகிறது. தனது சமாதான வேசத்தின் காவல் நாய்களாக தமிழர்களையே – ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., த.வி.கூ., முதல் கொழும்பிலுள்ள யாழ் பல்கலைக்கழக மனித உரிமை ஆசிரியர் சங்கம், மனோரஞ்சன் வரை –பயன்படுத்தி வருகிறது. சிறீலங்கா அரசின் அரசியல் வெற்றிகள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பின்னடைவுகளே.

### 2. இந்திய அரசா?

புளொட் புகழ் பரந்தன் ராஜனின் ஈ.என்.டி.எல்.எவ். ஊடாக இந்திய அரசும், புலிகளும் பரஸ்பரம் உறவுகளைப் புதுப்பிக்க முனைகையில் வெளிநாடுகளில் இந்திய உளவுப்படையான றோவின் நடவடிக்கைகள் குறித்து கஜன் எச்சரித்தது இந்திய அரசுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியதா? பாகிஸ்தான், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, மேற்கைரோப்பிய நாடுகளுடனான சிறீலங்காவின் உறவு நெருக்கமாவதால் இந்த உறவை உடைக்க இந்திய அரசால் மேற்கொள்ளப்பட்டதா? தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு இந்திய அரசு அன்றும், இன்றும், என்றும் எதிரானதே. சிறீலங்கா அரசு இராணுவ ரீதியாக என்றால் இந்திய அரசு தனது உளவுப்படைகள் மூலம் தமிழீழ விடுதலைக்கான போராட்ட சக்திகளைச் சிதைப்பதில் வெற்றியடைந்தேயுள்ளது. புலிகளின் இராணுவத் தளபாடங்களுக்கான பாதை இந்திய அரசால் தடங்கலுக்குள்ளாகியிருப்பதால் ராஜதந்திர ரீதியாக இந்திய அரசுடன் உறவுகளைப் புதுப்பிக்க புலிகள் முனைவதில் தவறில்லை. ஆனால் தமது வெளியீடுகளில் இந்திய அரசு பற்றிய மாயையை மறுபடி கட்டமைக்க முனைவது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆபத்தானது. இந்திய அரசு புலிகளுடன் கொள்ளும் உறவு என்றுமே அதன் நலன் சார்ந்ததும், ஈழத்திற்கு எதிரானதுமே.

www.tamilarangam.net

3. உள்வீட்டுச் சண்டையா?
உள்வீட்டுச் சண்டையால் தாம் சார்ந்த அமைப்புகளாலேயே பலர் கொல்லப்பட்டமை அனைத்து இயக்கங்களினதும் வரலாற்றில் மறக்க முடியாத உண்மையாகும். இப்படி நடந்திருக்குமாயின் கொல்லப்பட்டவர்கள் யார் பக்கம்?

ஈழத் தமிழர்கள் வாழுகின்ற வெளிநாடுகள் வரை இந்திய, சிறீலங்கா அரசுகளினது கரங்கள் நீளுவதை ஈழவிடுதலையை நேசிக்கும் அனைவரும் எச்சரிக்கையுடன் கவனத்திலெடுத்துக்கொள்ள வேண்டும். புலிகளுடனான முரண்பாடு பொது எதிரிகளுக்குச் சாதகமாகிவிடக் கூடாது. இது புலிகளின் கவனத்திற்கும் உரியது.

ஆளை அழிப்பதால் கருத்துகளை அழிக்க முடியாது, வாழையை வெட்டிச் சாய்த்தாலும் தாயடியில் குட்டிகள் முளைக்கும் என்று கஜனுக்காக எழுதப்படுகின்ற அஞ்சலி வரிகள் சில வருடங்களுக்கு முன்னால் இதே நாட்டில் இதேபோல் கொல்லப்பட்ட விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலப் போராளிகளில் ஒருவரான சபாலிங்கத்திற்கும் பொருந்தும். கனடாவில் தமிழரின் ஆய்வுக் களஞ்சியமாயிருந்த தேடக நூல்நியை எரிப்புக்கும் பொருந்தும்.

## புலிகளுக்கு... !
நீங்கள் தமிழீழ விடுதலையை உச்சரிப்பது உண்மையாகவேயென்றால், உங்களை நம்பி வந்து தமிழீழ விடுலைக்காகத் தமது உயிர்களைத் தியாகம் செய்த போராளிகளை நீங்கள் மதிக்கின்றீர்கள் என்றால் தமிழீழ விடுதலைக்கான சுதந்திரமான அரசியற் செயற்பாடுகளுக்கு வழிவிடுங்கள். தமிழீழ விடுதலையின் எதிரிகள், நண்பர்கள் பற்றிய உங்கள் மதிப்பீட்டை திரும்பச் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

## புலியைக் கடிக்கும் புத்திசீவிகளுக்கு... !
உங்கள் கையாலாகாத்தனத்திற்காகவும், நித்திரையாயில்லை என்று காட்டுவதற்காகவும் புலிகளை எதிர்க்க மட்டுமே பொங்கியெழுவதற்கு எந்த வகையில் அரசியல் நியாயம் கற்பிக்கப் போகிறீர்கள்? புலிகளின் சனநாயக விரோதச் செயற்பாடுகளை எதிர்க்கும் அதேநேரம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நீங்கள் எந்தப் பக்கம் என்பதைச் சொல்லாமல் ஏன் ஒளிக்கின்றீர்கள்? அரசியல் பின்பலமற்ற நிலையில் புலிகளைக் கடிப்பதற்காகவே வெளியிடப்படும் துண்டுப் பிரசுரங்களும், சந்திப்புகளும், படைப்புகளும் உங்கள் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதைத் தவிர வேறெதைச் சாதிக்கின்றன என்பதை நீங்கள் தூங்காதிருக்கும்போது கேட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்.

## தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நேசிப்பவர்களே..!
தமிழீழ விடுதலைப் போராட்டம் பலவீனமடைந்திருக்கையில் அதை மீண்டும் பலப்படுத்துவது உங்கள் கடமையில்லையா?
இத்தனை வருடகாலமாக எமது மக்கள் அனுபவித்து வருகின்ற துன்பங்களுக்கு விடிவு வேண்டாமா?
தமது சொந்தம், சுகம், சொத்துத் துறந்து தமிழீழ விடுதலைக்காகத் தம்மையே அர்ப்பணித்த போராளிகளுக்கான வீர வணக்கம் என்ன?
அந்நியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தாயகம் மீட்கப்பட வேண்டாமா?
மௌனம் அழிவுக்குத் துணையாயில்லையா?

சுதந்திர மனிதராய் தாயக மண்ணில் வாழ்வதற்கான போராட்டத்தில் மாற்று வழியைத் தேடி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

-போராளி சிவகுமாரன் பாசறை

26.11.1996

செய்தி: 1

*ஈழவிடுதலைப் போராட்டம் அது சார்ந்தவர்களையும் காவு கொள்வது தொடர்வதால் இச் செய்தி உங்களுக்கு தற்காலிகமாக இரகசிய வழிகளில் கிடைக்கிறது. பரவலாக்குவது உங்கள் கையில்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்